நாடகம்

கௌரவ ஆசிரியர்
எஸ்.எம். சந்தானம்

25
காசுகள்

ESTED : 1875

TELEPHONE : 380

TELEGRAMS : "ROXY TALKIE"

S. Noor & Sons,

★

: SOLE AGENTS FOR :

HIGH QUALITY GERMAN MAKE
CINEARC CARBONS

: DIRECT DEALERS OF:

HIGH GRADE WATCEHES, CLOCKS, and TIMEPIECES, OPHTHALMIC OPTICIANS, EXPERTWATCH REPAIRES

AND

CINE EXHIBITORS

★

493, BIG BAZAAR :-: TIRUCHIRAPALLI-8.

தந்தி: "பிஸ்னஸ்"
போன்: 278

தபால்பெட்டி எண் 412
தபால் பர்மிட் நெ: 747

தற்கால நவநாகரீகத்திற்கேற்ற, தங்க நகைகளும், கல் வைத்த நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் கால் கொலுசுகளும் மற்ற ஆபரணங்களும், நாணயமும், நம்பிக்கையும், கைராசியும் உள்ள இடம்

★ ராமா ஜுவல்லரி மார்ட் ★

N. ராமலிங்கம் செட்டி & கோ.,

96, வெள்ளை வெற்றிலைக்காரத்தெரு, திருச்சி-8.

அழகிய அச்சுவேலைகளைச் சிறந்த வேலைப்பாடுடன் நேர்த்தியான முறையில் பார்ப்போர் மனதைக் கவரும் வகையில் உன்னதமாகவும், சுத்தமாகவும், குறிப்பிட்ட நேரத்திலும், குறைந்த சார்ஜில், தங்கள் மனதிற்குகந்த முறையில் பிரிண்டிங் & பைண்டிங் வேலைகளைச் செய்துகொடுக்குமிடம்:

ராமா பிரிண்டிங் ஒர்க்ஸ்

Prop: N. ராமலிங்கம் செட்டியார்,

96, வெள்ளை வெற்றிலைக்காரத்தெரு,

திருச்சி-8.



பவுன், தங்கம், வெள்ளி
நகைகளுக்கு உத்திரவாதமான
இடம்:

A. S. N.

சொக்கலிங்கம் செட்டியார்

ஜுவல்லர்ஸ்,

பெரியகடைவீதி :: புதுக்கோட்டை.

(திருச்சி ஜில்லா)

NAZEER & BROS., WATCH HOUSE

60, SINGARATHOPE, ST.,

TIRUCHY-8.



AUTHORISED DEALERS

for

SKYMASTER, LANDMASTER

&

PRECISION WATCHES

SPECIALIST IN

WATCH REPAIRERS

Prop: N. முனியாண்டி பிள்ளை சன்ஸ்,
புதுக்கோட்டை.

ரேடியோ
பீடி
ரேடியோ பீடி
500
REGD.
TRADE
MARK
RADIO
BEEDI
திருச்சி
RADIO BEEDI
ரேடியோ பீடி கம்பெனி
அல்லிமால் தெரு, திருச்சி.
M.R.TRI.

A. R. P. தாதுவிருத்தி லேகியம்

வயோதிகரை வாலிபராக்கும்.
ஒரேநாளில் குணம் தெரியும்.
½ சேர் டின் விலை ரூ. 6—0—0

கிடைக்குமிடம்:

A. இராஜுப் பிள்ளை,

A. R. P. மருந்துக்கடை :: திருச்சி-2.

ஸ்டார் ஸ்டுடியோ

உரிமையாளர்:

K. P. வரதராஜு,

63, பெரியகடைவீதி :: திருச்சி-8.

கல்யாணம், உற்சவம், ஊர்வலங்களில் பிளாஷ், சினி படத்திற்கும், என்லார்ஜ் மெண்டுகள், குரூப் போட்டோக்களுக்கும் பெயர்பெற்றது.

முக்கியக் குறிப்பு:

ஏக காலத்தில் 50 பேர் அடங்கிய குரூப் போட்டோ எடுக்க வசதியும் சிறந்த நவீன முறையும் அமைந்த

★ இடம் ★

A. R. P. கல்நார் பற்பொடி

ஆடும்பல் அசையாது இதைவெல்ல வேறில்லை.

ஸ்பெஷல் டின் 1-க்கு ரூ. 0—4—0
பாக்கெட் 0—2—0

கிடைக்குமிடம்:—A. இராஜுப் பிள்ளை,
A. R. P. மருந்துக்கடை :: திருச்சி-2.

அடுத்த இதழில் ஆரம்பமாகும் தொடர் நாடகம்

- மாயமாக மறைந்த மகேந்திரபுரி மன்னன் "விஜயசிம்மன்"
- சுரேந்திரன் கிளப்பிய சூராவளியில் சிக்குண்டு தத்தளித்த "விக்ரமகேது"
- மெய்க்காவலன் வீரசேனனுடன் வேந்தன் மனைவி ஓடிவிட்டாள் என்று கட்டிய கதைக்காக கண்ணீர் வடித்த "விஜயராணி"
- ராணிக்கு உதவி செய்த, மக்களின் மகத்தான அன்பைப்பெற்றும் சிறை சென்ற "அமரன்"
- சுந்தரபுரி மன்னன் வஜ்ஜிரகேது பெற்றெடுத்த வேல்விழி "ஊர்மிளா"
- இன்பமே இலட்சியமெனக்கொண்ட இன்பபுரி இளவரசன் "மாறவர்மன்"
- மரகதபுரி மன்னன் மாணிக்கவர்மனின் போட்டியில் வென்று மரகதவல்லியை மணம் புரிந்த "சித்ரசேனன்"

இவர்களின் நடமாட்டமே

"ராணி ஊர்மிளா"

[சரித்திர கற்பனை நாடகம்]

கதை :
"எழிலரசன்"

வசனம் :
"இளவரசன்"

நாடகம்

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டிற்கு நல்ல பயன் தரும்.

நிர்வாக ஆசிரியர்: S.L.S.V. அண்ணாமலை
ஆசிரியர்: திருவரங்கம், இரா. கோபால்

மேடை 1 } ஜூலை – 1958 { காட்சி 1

பொருளடக்கம்.

வாழ்க முத்தமிழ்!
''வளர்க வாழ்க''
கலைஞர் அறிமுகம்.
புதுமுகங்கள் அறிமுகம்.
படமுதலாளியின் பார்வைக்கு.
கட்டபொம்மன்
(நாடகத்தில் சில காட்சிகள்)
நடன உலகிலே.
சினிமாச் செய்திகள்.
திரு. நாகிரெட்டி அறிக்கை
என்னென்ன? எங்கெங்கே?
இசைமேடையிலே.
நாடகத்தில் மின்சாரம்.
நீங்கள் கேட்டவை.
நாடக விமர்சனம்.
நாடக மன்றங்கள்.
நாடக நாட்குறிப்பு.

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

வாழ்க முத்தமிழ்!

உலகில் எத்தனையோ கலைகள் இருக்கின்றன. அவற்றுள் தமிழ்க் கலை தனிச் சிறப்பு கொண்டது. அத் தனிச் சிறப்பு கொண்ட தமிழை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ். அப் படிப் பிரித்த முத்தமிழின் கடைசி வகைதான் நாடகத் தமிழ்.

படித்தல், கேட்டல், பார்த்தல் என மூவகையாகப் பிரித் தனர். அதில் கடைசிவகைதான் பார்த்தல். பார்ப்பதை உள்ளம் நன்குக நாடும். அதுவே அகம்-நாடும். நாடும் அகம் நாடு-அகம் எனவும் அதைச் சேர்க்க நாடகம் என வும் ஆயிற்று. இதையே பண்டைத் தமிழர் "கூத்து" என்றும் வழங்கினர். நாடகம்—நடிப்பது—என்பதில் இருக் கும் "நடி" என்னும் பகுதியிலிருந்து வந்ததாகவும் கூறு கின்றனர் அறிஞர்கள். உணர்ச்சிகளைச் சொல்லாலும், இசை யாலும், செயலாலும், வெளிப்படுத்துதலே நாடகம் எனப் படும். ஒலியை இயலாலும், இனிமையை இசையாலும், எழுச் சியை நடிப்பாலும் காட்டினல் நாடகம் சிறப்பின் சிகரத்தை அடையும்.

"நடிப்பு" என்பதை "உண்மை அல்லாதது" எனக் கூறுகின்றனர். நடிப்பவன் தான் நடிக்கும் பாகத்துடன் ஒன்றி பார்ப்பவனைத் தன் வயப்படுத்தி நடிப்பிற்கொரு உயிரோட்டம் கொடுப்பவன்தான் நடிகன். அவன் மொழிப்பற்றும், இசைப்பற்றும் உடையவனுக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நடிப்பின் சிறப்பை அவனிடத்தில் காணமுடியும்.

கதைகள் அனைத்தும் இரண்டு முடிவுகளைக் கொண் டவை. ஒன்று இன்ப முடிவு. மற்றென்று துன்ப முடிவு. கதைகளை வரலாறு, கற்பனை, சமூகம், என மூன்று பிரிவு களாகப் பிரிக்கலாம்.

வரலாறு: உலகைத் திருத்திய உத்தமர்களின் உண்மை நிகழ்ச்சிகள், அல்லது வாழ்ந்த சமுதாயம் வீழ்ச்சி அடைந்து விட்டது. வீழ்ச்சியடைந்த சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சி தேவை. இதைப் பின்னணியாகக்கொண்டு நடந்த உண்மை நிகழ்ச்சிகளை ஏந்திவரும் அரச பரம்பரையின் வரலாறு-இப் படியும் இருக்கலாம்.

கற்பனை: காலத்திற்கேற்றதாகவும், கருத்துள்ளதாகவும் வாழ்க்கையோடு ஒட்டுவதாகவும் இருக்க வேண்டும்.

சமூகம்: சமூகத்தில் மனிதனின் வாழ்க்கை நல்லவர் தீயவர் யார்-யார்? அதைக்கண்டு சேருவதும் விலகுவதும் எப்படி. எப்படியெல்லாம் வாழ்ந்தால் வளமாக வாழமுடியும். இவற்றை விளக்குவதாக இருக்கவேண்டும்-இவை நாடகத் தில் அமைந்தால் நல்ல வரவேற்புக் கிடைக்கும்.

இசை என்பதற்கு தன்வயப்படுத்துதல் என்பதுபொருள் இசை நிகழும்போது அசைவு நடைபெறுகிறது. அந்த அசைவு நாட்டியமாயிற்று. இசையை ஏழு பிரிவாகப் பிரித் திருக்கின்றனர். அதுதான் "ஏழிசை" எனப்பட்டது.

இன்னிசைக் கேட்டுத் தன்னிலை மறக்கும் "அசுணம்" என்ற பறவை, கார்மேகம் கண்டு தோகை விரித்தாடும் "மயில்", மகுடியின் இசைக்கு படமெடுத்தாடும் "நாகம்" தாயின் தாலாட்டுக் கேட்டு அயர்ந்துறங்கும் ' பச்சிளங் குழந்தை" குழலிசைக்கு காது கொடுக்கும் "பசு" இவை யனைத்தும் விலங்கினம் முதல் மனித இனம் வரை இசைக் குத் தன்னை ஈடுபடுத்திக்கொள்பவை என்பது தான் புலப்படு கிறது.

பண் அமைக்கும் பாவலர்கள் தமிழகத்தில் ஏராளம். பாடி, யாழையும் மீட்டக்கூடிய பாவலர்களை யாழ்ப்பாணர் என்றழைக்கின்றனர். வால்மீகி வடமொழியில் இயற்றிச் சென்ற ராமாயணத்தை தமிழாக்கித் தந்தார் கம்பர். நெடுஞ் சேரலாதன் மகன்-சேரன் செங்குட்டுவன், தம்பி—இளங்

கோவடிகள் "கண்ணகி" "காதையை-முத்தமிழின் முதல் நூலான சிலப்பதிகாரத்தை" நாடக உலகுக்குப் படைத்திட்டார்.

பத்திரை என்பவளின் சோக வரலாற்று "குண்டலகேசி" திருத்தக்கதேவன் இயற்றிய சீவக சிந்தாமணி, வண்டமிழ் வளையாபதி, மாதவியின் மகள் மணிமேகலையின் வரலாறு அத்தனையும் நாடகக் கருவூலங்கள்.

வையத்துப் புலவன் வள்ளுவன், மூதாட்டி அவ்வை, முக்கண் படைத்த முதல்வரே கூறினும் குற்றம் குற்றமெனக் காட்டிய நற்றமிழ் புலவன் நக்கீரன், கண்ணகியால் மாண்ட நெடுஞ்செழியன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி பிசிராந்தையார், சீத்தலைச் சாத்தனுர், காளமேகம், சேக்கிழார், நல்லாபிள்ளை, வில்லிப்புத்தூரார் ஆகியோர் எண்ணற்ற கவிகளைத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறுர்கள்.

வடமொழியில் காளிதாசன் இயற்றிய சாகுந்தலம், பாசன் இயற்றிய உதயணன், பட்டபாணன் இயற்றிய காதம்பரி ஆகியவை அழியாப் புகழ்பெற்ற அற்புத நாடகங்கள்.

கி. பி. 3-ம் நூற்றுண்டு முதல், 8-ம் நூற்றுண்டுவரை ஆண்ட பல்லவர்களுள் மகேந்திர பல்லவனும், உறையூரை ஆண்ட நலங்கிள்ளியும், தஞ்சையை ஆண்ட ராஜ ராஜ சோழனும், புதுக்கோட்டை, ராமனுதபுரம், திருவிதாங்கூர், மைசூர் ஆகிய நகரங்களை ஆண்ட மன்னர்களும் நாடகக் கலையை போற்றி வளர்த்திருக்கின்றனர்.

ஆந்திராவிலுள்ள விஜயநகர சாம்ராஜ்யமும், தென்னகத்திலுள்ள மகாபலிபுரம், சித்தன்னவாசல், காஞ்சீபுரம், சிதம்பரம், கங்கைகொண்டசோழபுரம், தாராசுரம், தஞ்சை, மதுரை ஆகிய இடங்கள் அனைத்தும் சிற்பக்கலைகள் இருக்கும் சிங்காரக்கூடங்கள்.

ஆங்கில நாட்டில் வால்ட்டேர், ஷேக்ஸ்பியர், பெர்னுட் ஷா, அலெக்ஸாண்டர் டூமாஸ் ஆகியோரும், தென்னகத்தில் சுந்திரம் பிள்ளை, பம்மல் சம்பந்த முதலியார், சங்கர தாஸ் சுவாமிகள் ஆகியோரும் நாடகப் பேராசிரியர்கள் வரிசையிலே வைத்துக்கொண்டாட வேண்டியவர்களுள் தலை சிறந்தவர்கள்.

தென்னகம் இவ்வளவு கலைப் பெட்டகத்தைத் தன்னகத்தே பெற்றிருந்தும்கூட நாடகத்துறை இன்று நலிந்து கிடக்கிறது.

ஆகவே நலிவைப்போக்கி அதற்கோர் மாற்றத்தைக் காணவும், (அமைச்சூர் சபா) பயில்முறை, தொழில்முறை, நாடக நடிகை, நடிகர்களுக்கோர் முன்னேற்றம் காணவும், மறைந்த நாடகக் கலைஞர்களை நினைவுபடுத்தி, அவர்கள் ஆற்றிய அரும்பெரும் செயல்களை மக்கள் மன்றத்தில் வைக்கவும், வெள்ளித் திரைக்கு வரமுடியாமல் இருக்கும் நாடக நடிகை, நடிகர்களுக்கு நல்லதோர் ஏற்றத்தைக் காணவும் முத்தமிழ்க் கலைக்குமட்டுமல்லாது மற்ற கலைகளின் வளர்ச்சிக்கும் பாடுபட முன் வருகிறது இந்த இதழ்.

நாட்டின் நல்லோரே! ஆதரவு தாரீர்! தாரீர்! என வேண்டுகிறோம்.

வாழ்க முத்தமிழ்!

அட்டைப் படம்

"நாடகம்" முதல் இதழின் அட்டைப் படத்தை அலங்கரிப்பவர் நாடகப் பேராசிரியர் உயர்திரு பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள்

"வளர்க வாழ்க"

★ தில்லை-முத்து. சம்பந்தன் ★

ஒரு நாட்டின் பண்பாட்டை ஆங்கே உள்ள
ஒப்பற்ற கலைகள்தாம் காட்டும் என்பார்.
பெருமை நிறைத் தமிழ்நாட்டில் கலைக்கா பஞ்சம்?
பேசரிய இயலென்றும் இசையே என்றும்
அருமைநிறை 'நாடகமும்' கண்டோம் வாழ்ந்தோம்
ஆனாலும் அவை எல்லாம் இந்நாள் எங்கே?
சுருங்கச் சொன் னால்அவற்றை மாற்றா ருக்கேச்
சொந்தமெனத் தந்துதலை தாழ்த்தி நின்றோம்.

நமை மறந்தோம் கலை மறந்தோம் நாட்டில் வாழும்
நல்லாரை, முத்தமிழைப் போற்றுகின்ற
அமைவுடைய அனைவரையும் மறந்தோம் இந்நாள்
ஆக்கத்தைத் தேடியலை கின்ற போதில்
இமைப்போதும் மறவாமல் தமிழ் மொழிக்கே
எந்நாளும் வாழ்வுதந்து வருவோம் என்று
நமை நோக்கி வருகின்ற இதழ்கள் கண்டோம்
நன்மை நிறை எழில் கண்டோம் இன்பங்கொண்டோம்.

'நடி' என்னும் சொல்லடியாய்த் தோன்றி நின்று
நம்மவரின் வாழ்வுதனை நடத்திக் காட்டும்
படியான நாடகத்தை பேணு தற்குப்
பாரினிலே ஏதேனும் ஏடும் உண்டோ?
அடியோடு கண்டதில்லை என்னும் போதில்
'அண்ணாமலை' என்னுமொரு அன்பர் "இந்தா
பிடியுங்கள் கைகளிலே" என்று சொல்லி
பெருமையுடன் ஏடொன்று தருதல் காண்க.

எத்தனையோ இடருள்ளும் இசைவ ளர்த்த
இளைக்காத அண்ணாமலைக் கண்டோம் அந்நாள்
முத்தமிழில் நாடகத்துக்(கு) ஆக்கம் நல்கும்
முன்னவராய் அண்ணாமலைக்கண்டோம் இந்நாள்
புத்துணர்ச்சி பூத்து வளர் 'நாடகம்" காண்
புகழ்பெற்ற அக்கலைக்கே ஆக்கம் தேடும்.
இத்தரையில் "நாடகம்" எந் நாளும் வாழ்க
எழிலோடும் புகழோடும் வளர்க வாழ்க.

ஆசிச் செய்திகள்.

"அவ்வையகம்"

டி. கே. எஸ் சகோதரர்கள். நிர். 139-B, லாயிட்ஸ்ரோடு
(போன் : 85260) சென்னை-6.

தேதி : 25—5—1958.

அன்புடையீர்,

வணக்கம்.

இடைக் காலத்தில் நலிந்து கிடந்த நாடகக்கலை இன்று புத்துயிரும், புத்தொளியும் பெற்று புகழ் பரப்பி நிற்கிறது. இந்த நேரத்தில் "நாடகம்" என்ற திங்கள் ஏடு வெளிவரவிருப்பதறிந்து மகிழ்கிறேன்.

தங்களுடைய நல்ல எண்ணங்கள் நிறைவேறவும் "நாடகம்" சிறப்புறவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

அன்பு,

டி. கே. ஷண்முகம்.

அண்ணுமலை நகர்,
10—6—58.

அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் நாடகக் கலைக்கும் அக்கலையைச் சார்ந்த மற்ற துணைக் கலைகளுக்கும் ஊக்கமளிக்க "நாடகம்" என்னும் மாதப்பத்திரிகையாரம்பித்திருப்பதைக்கண்டு மிக மகிழ்ச்சியுற்றேன்.

திரைப்படமும், ரேடியோவும், டெலிவிஷனும் பரவிவரும் இக்காலத்தில், நாடகக்கலையைப் போற்றி வளர்க்கவேண்டிய எல்லா முயற்சிகளும் எடுக்கவேண்டியது மிக மிக அவசியம். இப்பணியைச் செய்யத் தாங்கள் முன்வந்திருப்பது போற்றத்தக்கது. முக்கியமாக அமெச்சூர் நடிக நடிகைகளையும், அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் சங்கங்களை ஊக்குவித்து முன்னேற்றமடையச் செய்ய எண்ணம் போற்றற்பாலது. தமிழ் நாட்டில் நாடகக் கலைக்கென்று ஒரு தனிப்பத்திரிகை இதுகாறும் இல்லாத குறையை தாங்கள் இம் முயற்சியால் நீக்கிவிட்டீர்கள். தங்கள் ஏடு சிறப்பாக வளர்ந்தோங்கி, நாடகக் கலைக்குச் செம்மையான முறையில் பணியாற்றவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன். உங்கள் முயற்சிக்கு என்னுலான உதவியைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன் வாழ்க உம் பத்திரிகை! சிறக்க உம் சீரியத் தொண்டு.

இப்படிக்கு அன்புள்ள,
ஸி. ஆர். மயிலேறு.

கலைஞர் அறிமுகம்

(மின்சாரம்)

K. விஸ்வேஸ்வரன்

சுமார் 48 வயது நிரம்பிய இவர் மின்சாரக் கலையில் மிகவும் தேர்ச்சிப்பெற்றவர். சொந்த ஊர் திருத்துரைப் பூண்டி. இண்டர் வரை படித்திருக்கிறார். இப்பொழுது பள்ளத்தூரில் இருந்து வருகிறார். சுமார் 200 நாடகங்களுக்கு மேல் டைரக்ட் செய்திருக்கிறார். 1000 நாடகங்களுக்குமேல் மேக்கப் செய்திருக்கிறார். சமஸ்கிருத மொழி தெரிந்தவர். நாடக நுழைவுக் கட்டணத்திற்காக முதல் வகுப்பிற்கு கொட்டைப்பாக்கையும், அதன் பின்னுள்ள வகுப்பிற்கு புளியங்கொட்டைகளையும் வசூல் செய்து, அப்படி வசூலானவற்றை விற்று பணமாக்கி நாடகம் நடத்தியிருக்கிறார்.

இவர் ஸ்ரீ ராமபாலகானவினோத சபாவின் டைரக்டர். 1917-ல் மஞ்சு கோஷா, சந்திரமதி, கோவலன், சத்தியவான் சாவித்திரி முதலிய நாடகங்களில் பெண்வேடம் தாங்கி நடித்தவர். ''கண் பார்த்தால் கை செய்யவேண்டும்'' என்ற அவர் தாயின் அமுத வாக்கை அடிப்படையாகக்கொண்டு படிப்படியாக முன்னேறியவர்.

மிருதங்கம் நடேசய்யர் ஹார்மோனியத்துடன், நடராஜ் சகுந்தலா, செல்லப்பா, என் தங்கை நடராஜன், காந்திமதி ஆகியோருடன் பல ஊர்களில் நாடகங்களை நடத்தினர்.

திரு. வி. க , பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் ஆகியோர் இவரைப் புகழ்ந்திருக்கின்றனர். நவாப் T. S. ராஜமாணிக்கம் தலைமையில் நடந்த "தாகசாந்தி" நாடகம் அவருடைய புகழை இன்னும் ஒருபடி மேலாக்கியது.

சுதந்திர இந்தியா, கடமை, தியாகி, சுதந்திரம், அவன் யார், ஏமாற்றம், வாழ்விலே, ஏன் மயக்கம், காலம், மின்னல் ஆகிய நாடகங்களை எழுதி அதில் தானும், நடித்து சிறப்பித்தார்.

ஸ்ரீ ராமபாலகானவினோத சபாவில், முஸ்தபா, பீர் முகம்மது, வெங்கட்ராமன், சாயிராம், ராம்சிங், நாஞ்சில் ராஜப்பா, M. M. மாரியப்பா, விஷ்ணு ராமசாமி அய்யர், ஆகியோரை வைத்து இவரே ஆசிரியராகவும் டைரக்டராகவும் நாடகங்களை நடத்திவந்திருக்கிறார்.

புதுவயல் S. P. வீரப்பா எழுதிய திருமழிசை ஆழ்வார் நாடகத்தை முதன் முதலில் "டெக்னிக் கலர்" நாடகமாக ஆக்கி சிறப்பித்தவர் இவரே. இதன் காரணமாக சென்னை சுகுண விலாச சபாவில் 37 வாரம் நடந்தது.

செட்டிங்ஸ் அமைப்பதில் நிபுணர். நாடகத்தில் முதன் முதலில் ஸ்லைடு போட்டு காட்டியவரும் இவரே.

திருச்சி தேவர் மன்றத்தில் நடந்த "எதிர்பார்த்தது" என்ற நாடகத்தில் கடந்த நிகழ்ச்சிகளை 3 நிமிடத்தில் 18 காட்சிகளை அமைத்து மக்களின் ஆதரவைப் பெற்றவர். O. K. பாலு, ரத்னவேலுத்தேவர், பொன்னம்பலம், F. G. நடேசய்யர் ஆகியோர் இவரின் தொழில் நுட்பத்தை வியந்து பாராட்டினர்.

T. K. S. சகோதரர்கள் நடத்திய "மனிதன்" இன்ஸ்பெக்டர், அந்தமான் கைதி, இமயத்தில் நாம் ஆகிய நாடகங்களுக்கு காண்ராக்ட்டாக மின்சார அமைப்புகளைச் செய்துகொடுத்து அவர்களின் பாராட்டையும் பெற்றவர்.

இவருக்கு மறைமலையடிகள், சர்தார் வேதரெத்னம், சச்சிதானந்தம் ஆகியோர் "கலைச்செல்வன்" என்ற பட்டத்தை அளித்தனர்.

"டெக்னேஸ்கோப்" என்ற நவீன மின்சாரத்தின் மூலம், நாடகம், சினிமா இவைகளைவிடச் சிறந்த முறையில், குறுகியக் காலத்தில் எளியோர் எல்லோரும் புரிந்துகொள்ளும் முறையிலே பல நிகழ்ச்சிகளைக் காட்டுகிறார். "தில்லைக் காட்சி" என்ற தலைப்பில் நந்தன் வரலாற்றை சென்னை, சேலம், மைசூர், மதுரை, கும்பகோணம் முதலிய பொருட்காட்சிகளில் காட்டி, மக்களின் பேராதரவைப் பெற்றவர்.

தில்லைக்காட்சியைக் கண்ணுற்ற சைனா, அம்பாஸிடர், இது போன்ற நவீன மின்சார முறைகள் ஜப்பானில் உண்டு. அதைவிட மேலாக இந்தியாவில் கண்டுபிடித்து கையாளுவதையும் குறிப்பிட்டு அவரைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

நாமக்கல் கவிஞரால் "கலைஞன்" என்ற பட்டத்தைப் பெற்றவர்.

சுத்தானந்த பாரதி, அறிஞர் அண்ணாத்துரை, ராஜேந்திர பிரசாத், நிதிமந்திரி C. சுப்பிரமணியம், முதலமைச்சர் K. காமராஜ் ஆகியோர் இவருடைய கலைநுணுக்கத்தைப் பாராட்டியிருக்கின்றனர்.

தில்லைக் காட்சிக்காக மைசூர் மகாராணியின் பரிசைப் பெற்றவர்.

இராமநாதபுரம் ஜில்லாவில் சாரணர் இயக்கத்தில் ஜெனரல் மாவட்ட கமிஷனராக இருக்கிறார்.

இவர் கலைக்காகவே தன்வாழ்வை அர்ப்பணித்திருக்கிறார்.

வளர்க கலை! வாழ்க கலைஞர்!!

கலைஞர் அறிமுகம்

டைரக்டர் G. K. சாமி.

கலா நிபுணர் G. K. சாமி அவர்களை நாடகக் கலையுலக அன்பர்கள் தெரியாமல் இருக்க முடியாது. B. A வரை படித்திருக்கிறார். சுமார் 40 வயது நிரம்பிய இவர் 24 வருடகாலம் அனுபவம் பெற்றிருக்கிறார் ராஜாசாண்டோ, ராஜாசந்திரசேகர் ஆகிய சினிமா டைரக்டர்களிடமிருந்து தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார். "ராஜமுக்தி" திரைப் படத்திற்குப் பிரதம உதவி டைரக்டராகப் பணியாற்றி இருக்கிறார். நாடக வசனம் எழுதல், பாடல் இயற்றல், மேடை நுணுக்கம் ஆகிய கலைகள் நன்றாகத் தெரியும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பங்கேற்று சிறந்த நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறார். திருச்சி சிட்டி அமைச்சூர்ஸில் நிரந்தர டைரக்டராக இருந்து வருகிறார் 1958 ஜூலை 8ல் தேவர் மன்றத்தில் "கலை விழா" ஒன்றை ஏற்பாடு செய்தார். அது இவருக்குப் பெரும் வெற்றியை அளித்தது.

மேக்கப் கலையில் சிறந்த நிபுணர். இந்தக் கலையை அமெரிக்கப் புத்தகப் படிப்பால் தெரிந்துகொண்டு அதை நடைமுறையில் செய்துகாட்டி வெற்றி கண்டவர். இவர் சிறந்த டைரக்டர் என மக்களின் ஆசியைப் பெற்றவர்.

இவருக்குப் புகழ்தந்த நாடகங்கள், பொன்னையா பள்ளியில் நடந்த "மனோன்மணீயம்" சிட்டி அமைச்சூர்ஸ் அளித்த "இழந்த காதல்" G. K. S. நாடக மன்றம் அளித்த "குற்றவாளி" சிலம்பு நாடக மன்றம் அளித்த "ராஜ்கலா" திருக்கோகர்ணம் கலா ரஞ்சனியாரின் "தியாகச் சின்னம்" புதுக்கோட்டை ஜோதி கலா மன்றம் அளித்த "கனவு" ஆகியவை.

ஊதியம் கருதாமல் உழைத்தவர். இரவு பகலென பாராது கலைக்காகத் தொண்டாற்றியவர். காடு, மேடு சுற்றிக் கலையை வளர்த்தவர். பட்டி தொட்டி யெல்லாம் சுற்றிப் பைந் தமிழ்க் கலை வளர்த்தவர். இவர் பேச்செல்லாம் கலை பற்றியவை. இன்று திரையுலகத்திற்குச் சென்றிருப்பவர்களில் சிலர் இவரின் கை வண்ணம்பட்டவர்கள் தான். இவர் கலைக்காகவே வாழ்கிறார் என்றால் அது மிகையாகாது.

கலைஞர் அறிமுகம்

வசனகர்த்தா: M. R. பாலு



'என் விதி' M.R. பாலு என்றால் நாடக உலகில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. குடந்தையில் சுமார் 15 வாரம் ஓடி மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்றது தான் "என்விதி" என்ற நாடகம். இதன் கதை வசனத்தை எழுதியவர் M. R. பாலு. இதனால் M. R. சுப்பையா நடத்தி

வந்த மதுரை M. R. S. நாடகக் கம்பெனிக்கு பேரும், புக ழும் கிடைத்து வந்தது. இதன் காரணமாகப் பல நாடகங் களை எழுதி பல மன்றங்களுக்குக் கொடுத்திருக்கிருர். இன்று பயில் முறை, தொழில்முறை நாடக மன்றங்களில் பல இவருடைய கதையை நடத்தி வருகின்றன. இவர் சேஷிப் பாட்டி, லீலா மஜீத், அரசியல் கைதி, நான் நடந்த பாதை, சிலை, பார் என் நிலைமையை, ராஜகுரு, நீதிமன்றம், கௌதம புத்தர், மனதுக்கிசைந்த மணாளன், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு முதலிய நாடகங்களை எழுதியிருக்கிருர். 'பார் என் நிலைமை' நாடக வசனத்தை மலர்க்கொடி பதிப்பகத்தார் புத் தகமாக வெளியிட்டனர். "என்விதியை" சில கம்பெனிகள் பெயரை மாற்றி அதே கதையை நடத்தி வருகின்றன, என் ருல் கதையின் தரத்தைத் தான் பாராட்டவேண்டியிருக் கிறது.

இவர் சிறந்த சிரிப்பு நடிகர். சிறந்த பயிற்சியாளர், கலைக்காக இரவு பகலென உழைக்கக்கூடியவர். இவ ருடைய சொந்த ஊர் மதுரை. 1920-ம் ஆண்டு பிறந்தார். பள்ளியில் படித்துக்கொண்டிருந்த 18-வது வயதில் படக் கம்பெனியில் நடிக்கலானுர்.

மதுரை V. S. டாக்கீஸார் எடுத்த "வீர ஜெகதீஸ்" என்ற படத்தில் சிரிப்பு நடிகராக S. S. ராஜாமணியுடன் முழுபாகத்தில் நடித்திருக்கிருர். "என்விதி" நாடகம் ஈ. வே. ரா, அண்ணு, என்னெஸ்கே. ஆகியோரால் பாராட் டப்பட்ட நாடகம். "என்விதி" படமாக எடுக்கக்கூடிய சிறந்த நாடகம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.



— P. முத்தையா —

சுமார் 100 நாடகங்களுக்கு மேல் நடித்து மக்களின் ஆதரவைப் பெற்றுவருபவர்தான் P. முத்தையா. வயது 35. சுமார் 15 வருட அனுபவம் பெற்றவர். T. S. பரமசிவம் அவர்களால் எழுதப்பட்ட வண்ணமதி நாடகத்தில் சிறப்பாக நடித்து நற்பெயர் பெற்றவர். இதனாலேயே வண்ணமதி முத்தையா என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

M. M. மாரியப்பா மன்றமான மூவேந்தர் நாடக மன்றத்தில் அநேக நாடகங்களில் நடித்திருக்கிறார். இதன் காரணமாக மைசூர், பெங்களூர் ஆகிய நகரங்களிலும் பங்கேற்றிருக்கிறார். M. M. மாரியப்பா, G. K. சாமி ஆகியோர்களின் முயற்சியினாலேயே இந்த நிலைக்கு வந்திருக்கிறார். சிறிது சிறிதாக கலைஉலக மக்களின் உள்ளங்களைக் கவர்ந்துவருகிறார்.

V. தக்ஷணாமூர்த்தி

சுமார் 33 வயது நிரம்பிய இவரின் சொந்த ஊர் புதுக்கோட்டை. 10 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்ற இவர் பலநாடகங்களில் நடித்து நற்பெயர் பெற்றவர். புதுவை, ஒளவை நாடக மன்றத்தின் நிரந்தர உறுப்பினர். இவர் தீனராஜன் எழுதிய விதியின் விசித்திரத்திலும், மு. கருணாநிதி எழுதிய (தூக்குமேடை) பகுத்தறிவின் பரிசிலும் A. M. விஜயன் எழுதிய "நமது கடமை" துரையரசன் எழுதிய "யார் அடிமை" நாகராஜன் எழுதிய "புது உதயம்" R. தங்கவேல் எழுதிய 'சிதைந்த வாழ்வு' தேவிக்குமார் எழுதிய "கைதியின் காதலி" முதலிய நாடகங்களில் நடித்து மக்களின் பேராதரவைப் பெற்றவர். பல விகடக் கச்சேரிகளும் செய்து இருக்கிறார். சிறந்த சிரிப்பு நடிகர். ஒளவை நாடகமன்ற டைரக்டர் C. சுப்ரமணியம் அவர்களால் முன்னுக்கு வந்தவர். மின்னல் வேகத்தில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் நடிகர் V தக்ஷணாமூர்த்தி.

கலைமீது உண்மையான பக்தியிருந்தால், மனைவியைப் பட்டினிப் போடுவான்; குழந்தைகள் வெறும் காலோடு நடப்பார்கள்; அவன் தாய் துயரமடைவாள்; வயது எழுபதானாலும் தன் கலையைத் தவிர எதையும் தொடான் கலைஞன்!

—ஷேக்ஸ்பியர்.

— நளினி ஜெயந்தி —

ஆர்க்காடு மாவட்டத்தில் பல நாடகங்களில் நடித்துப் பேரும் புகழும் பெற்றவர் தான் நளினிஜெயந்தி கதாநாயகி முதல் எல்லா பாகங்களையும் நடிக்கக் கூடியவர். பாடவும். நாட்டியமாடவும் தெரியும். நாடகங்களில் நடித்துப் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார். சுமார் 19 வயது நிரம்பிய இவரின் சொந்த ஊர் விழுப்புரம்—மருதூர். இன்றைய அளவில் இவருக்குப் புகழ் தந்து கொண்டிருப்பது அமைச்சூர் நாடகங்கள். முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் ஒரு சிறந்த நடிகை நளினி ஜெயந்தி.

T. V. நடராஜன்



கலைஞர் மு. கருணாநிதி எழுதிய நாடகமான "தூக்கு மேடையில்" பாண்டியனாக நடித்து நற்பெயர் பெற்றவர் தான் T. V. நடராஜன். இவருடைய சொந்த ஊர் தஞ்சை மாவட்டத்திலிருக்கும் பொன்னுப்பூர். 5 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்ற இவர் பல நாடகங்களில் நடித்திருக்கிறார். 22 வயது நிரம்பிய இவர் கதாநாயகன் பாகத்தில் சிறப்பாக நடிக்கக்கூடிய திறமை பெற்றவர். இவர் பெண் வேடம் தாங்கி

யும், சிரிப்பு நடிகராகவும் நடித்திருக்கிருர். ஓரத்தநாடு ஆசிரியர் மதிவாணன் அவர்களால் இந்தத்துறைக்கு வந்தவர். முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் சிறந்த நடிகர் T. V. நடராஜன்.

T. S. சரோஜா

40 நாடகங்களுக்குமேல் நடித்து நற்பெயர்கொண்ட இளம் நடிகை T S சரோஜா சுமார் 18 வயது நிரம்பியவர். நாட்டியம் ஆடத் தெரியும். 8வது வரை படித்திருக்கிருர். A. P. நாகராஜன் 'நால்வர்' நாடகத்தில் கமலாவாக நடித்திருக்கிருர். 2-1-1958-ல் அகில இந்திய ரேடியோவில் நடந்த 'சூர்ய காந்தி' நாடகத்தில் அம்புஜமாக நடித்தவர். வைரம் நாடக சபையில் நடநத 'கட்டபொம்மன்' நாடகத்தில் வெள்ளையம்மாவாக நடித்திருக்கிருர். இவருக்குப் புகழ்தந்த நாடகங்கள், R. A. ஷா அளித்த "அனுர்கலி", பூங்கோதை நாடக மன்றத்தாரால் முத்துவேலழகனுல் எழுதப்பட்ட "இனமுரசு", "ராஜத்துரோகி" மூவேந்தர் கலா மன்றத்தாரால் பரிமளத்தால் எழுதப்பட்ட "மிஸ்டர் ராஜா" 'அன்பின் பரிசு' ஆகிய நாடகங்கள்; மணிமேகலை நாடக மன்றத்தாரால் முத்து மோகனுல் எழுதப்பட்ட "இதய சாந்தி" மணப்பாறையில் நடந்த "லக்ஷியவாதி" ஆகிய நாடகங்கள் முன்னுக்கு வரவேண்டிய நடிகை T. S. சரோஜா.

G. விசுவநாதன்



இவர் இண்டர் வரை படித்திருக்கிறார். சுமார் 23 வயது நிரம்பிய இவர் 30 நாடகங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். தென்னிந்திய கலைச் சங்கத்தார் நடத்திய "விபரீதம்" நாடகத்தில் சிறப்பாக நடித்து நற்பெயர் பெற்றவர்.

சாக்ரடீஸாக நடிப்பதில் மிகவும் திறமை பெற்றவர். S. M. E. S. Corporation நடத்துகின்ற மாறு வேடப் போட்டியில் 3 ஆண்டுகளாக வெள்ளிக் கோப்பையை பரிசாகப் பெற்றுக்கொண்டு வருகிறார். "விளக்கும் விட்டிலும்", "புகழ் மாலை" ஆகிய நாடகங்களில் பங்கேற்று மக்களின் மகத்தான ஆசியைப் பெற்றவர்.

எழுத்தாளர்களுக்கு

நாடகம், நாட்டியம், சங்கீதம், சினிமா சம்பந்தமான கட்டுரைகள்; தொழில்; கலைஞர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் கதைகள்; நாடகக்கலையில் ஏற்படும் குறைபாடுகள்; அவற்றை நீக்க வழி வகைகள் இவைகளை எழுதி அனுப்பினால் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அவைகள் யாரையும் தாக்குவதாக இருக்கக்கூடாது. ஏற்றுக்கொள்ளப் படுபவைகளுக்கு ஆசிரியரின் உசிதம்போல் சன்மானம் வழங்கப்படும். கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

"நாடகம்" காரியாலயம்
திருச்சிராப்பள்ளி—2.

A. M. லீலா

சுமார் 17 வயது நிரம்பிய இவருடைய சொந்த ஊர் மதுரை. ஆருவது வகுப்பு வரை படித்திருக்கிருர். நல்ல முகவெட்டுள்ளவர். ஏறத்தாழ 120 நாடகங்களுக்கு மேல் நடித்திருக்கிருர். "வில்லி" பாகத்தில் நடித்து மக்களின் பேராதரவைப் பெற்றவர். இவர் M. R. சுப்பையா, ஸ்ரீ வைரம் M. K. T. பாகவதர், T. R. மகாலிங்கம், P. S. கோவிந்தன், ஆகியோர் நடத்தி வந்த நாடகக் கம்பெனிகளில் நடித்திருக்கிருர். நாடகத்தில் 8 வருடங்களுக்குமேல் அனுபவம் பெற்ற இவர் M. R. பாலு அவர்கள் எழுதிய நாடங்களில் அதிகமாக நடித்திருக்கிருர். ஸ்த்ரி பார்ட், ஆரப்பாளையம் முத்தையா அவர்களால் இந்தத் துறைக்கு வந்தவர். நன்ருக நாட்டியமாடக்கூடியவர். சிறப்பாக நடிக்கக்கூடியவர். எதிர் காலத்தில் திரையுலகுக்கு வரக்கூடிய நடிகை A. M. லீலா என்ருல் மிகையாகாது.

★ T. ரெங்கநாதன் ★



பயில்முறை நாடக மன்றங்களிலும் சிறந்த நடிகர்கள் இருக்கத்தான் இருக்கிருர்கள். 23.12.56ல்திருச்சி தேவர் மன்றத்தில் கலைக் கழக துவக்க விழா நடைபெற்றது. இந்த ஏற்பாட்டை செய்தவர் கலைக் கழகத் தலைவர் K. பெருமாள் B. A., B L., அவர்களும், செயலாளர் T. S. மாரியப்பாவும் ஆவார்கள்.

கலைக் கழகத் துவக்க விழா குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் உயர் நீதிமன்ற நீதிபதி கனம். சோமசுந்தரம் அவர்கள் கலைக் கழகத்தைத் துவக்கி வைத்தார்கள். இந்த விழாவில் டைரக்டர்கள் கிருஷ்ணன் பஞ்சு, கலைஞர் கருணநிதி, தோழர் P. ராமமூர்த்தி, சிவாஜி கணேசன், சந்திரபாபு, M. N. ராஜம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

அப்பொழுது ஒரு நடிப்புப் போட்டியும் நடைபெற்றது. அந்தப் போட்டியில் பிச்சைக்காரனைப்போல் நடித்துத் தங்கப்பதக்கத்தை முதல் பரிசாகப் பெற்றவர்தான் T. ரெங்கநாதன். சுமார் 25 வயது நிரம்பிய இவர் திருச்சி முற்போக்கு வாலிபக் கலை மன்றத்தின் நிரந்தர அங்கத்தினர். சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குருங்குடி.

5வது வரை படித்திருக்கிறார். நாடகத் துறையில் நல்ல அனுபவம் பெற்றவர். இவர் வார்த்தைகளை நிறுத்தி உச்சரித்து, அதற்கேற்ப "முகபாவத்தை" மாற்றக்கூடிய திறமை பெற்றவர்.

இவரை இந்த நிலைக்கு கொண்டுவந்தவர்கள் வசன கர்த்தா R. S. மணியும், டைரக்டர் M. S. எவாரிசும் ஆவர். இவருக்கு புகழ் தந்த நாடகங்கள் S. A. G. ராபி அளித்த "பரோபகாரி" K. P. S. கோன் அளித்த "சொர்க்கத்தில் காந்தி".

25—1—58-ந் தேதி திருவரங்கம் சாமி கலைக்குழுவினர் நடத்திய "என் விதி" நாடகத்தில் பங்கேற்று நடித்தவர்களும், கலைஞர்களும்.

கடன்வாங்கி கல்யாணம்



கல்யாணத்தில் எப்போதும் குதூகலத்தைத்தானே காண்கிறோம்? இந்தக் கல்யாணப் படத்திலும் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ஒரே சிரிப்பு மயம்!

சாதாரண நாகராஜனை (ஆர். கணேஷ்) தகல்பூர் மகாராஜாவாகவும், சர்வஜீர்ஞானந்த சுவாமியாகவும் ஆக்குகிறார் நமச்சிவாயம். (தங்கவேலு) எதற்கு? பிறரிடம், பெரும் தொகை பறிக்கவே. திவான் பகதூர் தர்மலிங்கம் (பாலையா) இந்த சூழ்ச்சியில் சிக்குகிறார். ஜமீன்தார் கருணாகரம் பிள்ளையின் (குணசித்திர நடிகர் ரங்கராவ்), பேத்தி மஞ்சுளா (சாவித்திரி, நாகராஜன் (கணேஷ்) மனதை கொள்ளை கொள்வது தத்ரூபமாக இருக்கிறதாம்.

விழி அழகி ஜமுனு, லீலாவாகத் தோன்றி, ஊமையாக அதியற்புதமாக நடிக்கிருராம். இவருக்கு ஜோடி டி. ஆர். ராமச்சந்திரன். பழம் பெரும் நடிகர் எல். நாராயண ராவ், பாலையாவின் தகப்பனுராக, இதயத்தைத் தொடும் வகையில் நடித்துள்ளார்.

தங்கவேலு, 'அலக்னிரஞ்சன்' சாமியாராகத் தோன்றி, சக்கைபோடு போடுகிருர். இவருக்கு காதலியாக வருகிறவர் ஆடல் அழகி ஈ. வி. சரோஜா. போலிச் சாமியார், "காசி தீர்த்தம் இது, ராமா ஹரே!" என்று ஒரு கூட்டத்தில் பாடும்போது, இல்லற வாழ்வுக்கு அழைக்க வந்துள்ள காதலி, "கார்ப்பரேஷன் ஜலம் இது, ராமா ஹரே!" என்று 'டூயட்' பாடி, எல்லோரையும் குலுங்கக் குலுங்க சிரிக்க வைக்கிருராம். மற்றும், 'கபளீகரஸ்வாமி' சாரங்கபாணி, ஏ. கருணுநிதி, ஏழுமலை, வாதிராஜ், முத்துலக்ஷ்மி முதலிய ஹாஸ்ய நடிகர்களும் நடிகைகளும் தோன்றும் இந்தப்படம் பிரபல பிரசாத் அவர்களால் டைரக்ட் செய்யப்பட்டிருக்கிறது. விஜயா புரடக்ஷன்ஸின் இந்த வெளியீட்டை தயாரித்தவர்கள் திரு. நாகி ரெட்டி, திரு. சக்ரபாணி.

ஜூன் மாதத்தில் தமிழ் நாடெங்கும் **'கடன் வாங்கி கல்யாணம்'** பவனி வரவிருக்கிறது.

"நாடகம்"

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உள்பட)

தனிப்பிரதி	...	0-25 ந.பை.
1 வருடம்	...	3-00 ,,
வெளிநாடு 1 வருடம்	...	4-50 ,,

விபரங்கட்கு:

"நாடகம் காரியாலயம்"

திருச்சிராப்பள்ளி-2.

கட்டபொம்மன்

நாடகத்தில் சில காட்சிகள்

கட்டபொம்மனுக
நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
(போட்டோக்கள் C. P. S. தஞ்சை)

வெள்ளையம்மாளாக
தாம்பரம் லலிதா

★

ஊமைத்துரையாக
வளையாபதி
முத்துகிருஷ்ணன்

★

பாதர்வெள்ளையாக
O. A. K. தேவர்



தஞ்சையில் கட்டபொம்மன் நாடகத்தில் சிவாஜி கணேசனுக்கு
"பெரியகோவில்" சிற்பத்தைப் பரிசளித்தார்
கரந்தை N. S. ஷண்முகவடிவேல்.

கலைஞர் கருணாநிதியும். நடிகர் திலகம் சிவாஜியும்,



நடிகர் திலகம் சிவாஜிகணேசன்
கலைஞர் கருணாநிதிக்கு
மாலை அணிவிக்கிறார்.

நடன உலகிலே..

குமாரி, B. ரேவதி வயது 22
குமாரி, K. சங்கரி வயது 15

இவர்கள் தஞ்சை L. பிச்சையா பிள்ளை ஞாபகார்த்த பரதநாட்டிய வித்யாலயத்தில் முறைப்படி பரதநாட்டியம் பயின்றவர்கள் தஞ்சை ஸ்ரீமதி K. லக்ஷிமிகாந்தம் அவர்களால் பயிற்சியளிக்கப்பட்டவர்கள்.

அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட செய்திப் படங்களில் நடனமாடியிருக்கின்றனர். புது டில்லியில் நடந்த அகில இந்திய தேசிய நிகழ்ச்சியில் 4—8—56ல் கிராமிய இசை நடனமாடியிருக்கின்றனர்.

பாண்டிச்சேரி மேன்மை தங்கிய கவர்னர் அவர்களாலும், முன்னாள் ஒரிஸ்ஸா கவர்னர் ராஜபாளையம் கனம் (லேட்) ஸ்ரீ P. S. குமாரசாமி ராஜா அவர்களாலும், கல்கத்தா நிரித்யபாரதி பேராசிரியராலும், பம்பாய் சீதா பூவைய்யா அவர்களாலும், சென்னை பல் கலைக் கழகத்தாலும், அண்ணாமலை பல்கலைக் கழகத்தாலும், பத்திரிகை உலகத்தாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டவர்கள்.

இவர்கள் ஜதீஸ்வரம், பதம், அடவு, ஆனந்த பைரவியில் ஸ்வரஜதி, தில்லானா, குறத்தி நடனம் முதலியவைகளை வெகுசிறப்பாக ஆடுகின்றனர்.

★ ஆப்டோன், லைன் & கலர் ★

பிளாக்குகளுக்குச் சிறந்த இடம்

M.R. BLOCK MAKERS

கண்ணன் & கோ எதிர்மாடியில்

68, பெரியகடைவீதி, திருச்சிராப்பள்ளி-8.

இந்த இதழில் உள்ள பிளாக்குகளை தயாரித்துக் கொடுத்த "M. R. பிளாக் மேக்கர்ஸ்" அவர்களுக்கு எங்கள் நன்றி.



கடன்வாங்கி கல்யாணம்.

விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் முழுநீள ஹாஸ்யப் படத்தில்; ஜெமினி கணேசன், சாவித்திரி, எஸ். வி. ரங்காராவ், டி. எஸ். பாலையா, டி. ஆர். ராமச்சந்திரன், எல். நாராயணராவ், கே. ஏ. தங்கவேலு, ஜமுனா, ஈ. வி. சரோஜா முதலியோர்கள் நடிக்கும் இப் படத்தை பிரசாத் டைரக்ட் செய்கிறார். தயாரிப்பு நாகிரெட்டி-சக்ர பாணி. ஸ்டுடியோ வாஹினி.

தாமரைக்குளம்

கல்யாணி பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில் நடிகவேள் எம்.ஆர். ராதா, சௌகார் ஜானகி, பத்மினி பிரியதரிசினி, இந்துலேகா, கே. சாரங்கபாணி, வி. கோபால கிருஷ்ணன், டி. கே. பாலச்சந்திரன், எம். ஆர். சாமிநாதன் முதலியோர் நடிக்கின்றனர். திரைக்கதை வசனம் முகவை ராஜமாணிக்கம். டைரக்ஷன் வி. ஸ்ரீனிவாசன்.

நாடோடி மன்னன்

எம். ஜி.யார் பிக்சர்ஸ் தயாரிக்கும் இப்படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, எம். என். ராஜம், பி. சரோஜாதேவி, சந்திரபாபு, எம் ஜி. சக்ரபாணி, நம்பியார் முதலியோர் நடிக்கின்றனர். டைரக்ஷன் எம். ஜி. ஆர்.

பக்த ராவணா

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் பிரும்மாண்ட தயாரிப்பில் என். டி. ராமராவ், ஏ. நாகேஸ்வரராவ், எஸ். வி. ரங்காராவ், ஜமுனா, இவர்களுடன். கமலா-லக்ஷ்மணன், ஈ.வி. சரோஜா, ஹெலன், கோபிகிருஷ்ணாவும் நடனமாடியிருக்கிறார்கள். டைரக்ஷன் சங்கர்.

திரையுலகத்துக்குத் தடையா ?

திரு. நாகிரெட்டி அறிக்கை.

1958-ம் வருஷம் ஏப்ரல் 16-உ

கச்சாப் படச்சுருள் இறக்குமதியை (100க்கு 60%) பெருமளவில் இந்திய அரசாங்கம் குறைத்திருப்பதுகண்டு மனம் வருந்தி வாஹினி படப்பிடிப்பு நிலைய இயக்குனர் திரு. நாகிரெட்டி அவர்கள் கீழ்கண்டவாறு ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

1. என் வாழ்நாளில் முக்கியப் பகுதியை முழு நேரத்தைப் படத்தொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்தி வாஹினி ஸ்டுடியோவை இன்றுள்ள உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஹாலிவுட்டுக்கு அடுத்தது வாஹினி யென்று அன்னியர் பார்த்துவிட்டுச் சொல்லும்போது உண்மையில் இந்தப் பெருமை இந்தியா முழுமையும் சாரும் என்று நான் இதயபூர்வமாகக் கருதுவது உண்டு. ஸ்டுடியோவின் இந்த வளர்ச்சிக்கு டெக்னீஷியன்களின் சலியாத உழைப்பே முக்கிய காரணமாகும்.

2. நான் என் சுயநலப் பாதுகாப்பை முன்னிட்டு அல்லது லாபத்தை முன்னிட்டு கச்சாப் பிலிம் இறக்குமதி வெட்டை எதிர்ப்பதாக யாரும் எண்ணவேண்டாம்.

நானே நியமித்துள்ள ஆயிரக்கணக்கான தோழர்களை வீட்டுக்கு அனுப்ப என் மனம் ஒப்பவில்லை. என்னைப் போலவே இதர ஸ்டுடியோக்காரர்களும் லட்சக்கணக்கானவர்களை வீட்டுக்கு அனுப்புவார்களே, வேலை இழந்தோர் என்ன செய்வார்கள் என்ற மனக்கவலை காரணமாகவே அரசாங்கக் கொள்கையை எதிர்க்கிறேன்.

3. இந்த ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பமாட்டோம் என்ற உத்திரவாதத்தை அரசாங்கமே கொடுக்குமானல், அல்லது தகுதி வாய்ந்த வேறு யாராவது கொடுப்பார் என்

ருல் அவர்களிடம் நான் ஸ்டுடியோவை ஒப்படைக்கத் தயாராய் இருக்கிறேன். ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை நீடிப்பா? வேலையில்லாத் திண்டாட்டமா? என்ற பிரச்சனையில் என் சொந்த நலனுக்குத் துளிகூட இடம் இருக்க முடியாது.

4. இந்தியப் படத் தொழில் ஓங்கி வளர்ந்து, உலகெங்கும் நம் பண்பாட்டையும், ஆன்மீக உயர்வையும் பரப்ப அரசாங்கம் போதிய வசதிகள் செய்து தருவது முறையாகும். இல்லையென்ருல் அவர்கள் குறுக்கேயாவது நிற்க வேண்டாம் என்று வேண்டிக்கொள்கிறேன்.

வண்ணசந்தமகுட

தமிழ் இசை.

T. K. பாய்,

உறையூர்,

திருச்சிராப்பள்ளி.

நாடகம் நடத்துபவர்களுக்கு

நாடக மன்றங்களின் பெயர்கள், முகவரியுடன் தலைவர், செயலாளர் பெயர்கள், உருவாகும் நாடகங்களின் பெயர்கள் இவைகளின் விபரங்களை எங்களுக்குத் தெரிவித்தால் இதழில் இலவசமாகப் பிரசுரிக்கிருேம். ''நாடக விமர்சனம்'' பத்திரிகையில் வெளியிட விரும்புவோர் காரியாலயத்திற்கு எழுதவும்.

—ஆசிரியர்.

நீங்கள் சினிமாநக்ஷத்திரமாக ஒளிவீச விரும்புகிறீர்களா?

அப்படியானுல் கீழே கண்ட "பாரத்தை" பூர்த்தி செய்து, சமீபத்தில் எடுத்தப் புகைப்படத்துடன் அனுப்பி வைத்தால், புகைப்படத்துடன் பிரசுரிப்பதுடனும், படக் கம்பெனிகளில் நடிக்க சந்தர்ப்பம் கிடைக்க முயற்சிப்போம். தனிக் காகிதத்தில் வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா. கீழ் குறிப்பிட்ட "பாரத்தில்" தான் பூர்த்தி செய்ய வேண்டும். —ஆசிரியர்.

——— இங்கே கத்தரிக்கவும். ———

விண்ணப்பத்தாள்.

பெயர் ....

படிப்பு ....

வயது ....

சொந்த ஊர் ....

தொழில் ....

நிரந்தர விலாசம் ....

பாடத்தெரியுமா? ....

நாட்டியமாடத் தெரியுமா? ....

நாடகப்பயிற்சி உண்டா?
அப்படியானுல் எவ்வளவு காலம்? } ....

நடித்த முக்கிய நாடகங்களும்
வேடங்களும் } ....

நடிக்க விரும்பும் பாத்திரங்கள் ....

கையெழுத்து ....

தேதி ....

என்னென்ன? எங்கெங்கே??

ராஜகுரு

திருச்சி கலைவாணி நாடக மன்றத்தார் தயாரிக்கும் இந் நாடகத்தின் கதை வசனத்தை K. S. K. சாமி எழுதியிருக்கிறார். இதில் A. R துவாரகன், K. P. நாராயணன் மற்றும் பலர் நடிக்கின்றனர். இதை S. A. G. ராபி டைரக்ட் செய்து வருகிறார்.

கௌதம புத்தர்

திருச்சி முத்தமிழ் கலைமன்றத்தார் தயாரிக்கும் இந்நாடகத்தின் கதை வசனத்தை M. R. பாலு எழுதியிருக்கிறார். N. பெரியசாமி டைரக்ட் செய்யும் இந்நாடகத்தில் வண்ணமதி முத்தையா, ரெங்கராஜு மற்றும் பலர் நடிக்கின்றனர்.

கலாராணி

ஸ்ரீரங்கம் அஜந்தா நாடக மன்றத்தார் தயாரிக்கும் இந் நாடகத்தின் கதை வசனத்தை R. S. மணி எழுதியிருக்கிறார். டைரக்ஷன் பொறுப்பை தங்கம் தங்கராஜ் ஏற்றிருக்கிறார். சங்கர், ரெட்டைமலை, ஆறுமுகம், முத்துகிருஷ்ணன், ரங்கராஜ், B. M. சுந்தரம் முதலியோர் நடிக்கின்றனர்.

இந்த மலரில் ஓவியங்கள்
வரைந்து கொடுத்த
★ M. S. நடராஜன் ★
அவர்களுக்கு
எங்கள் உளங்கனிந்த நன்றி.

இசை மேடையிலே

— D. S. சுந்தரராஜ் —

சுந்தரராஜ் குழுவினர் என்ற பெயரால் சுமார் 15 வருடங்களுக்கு மேல் நாடகங்களுக்கும், கச்சேரிகளுக்கும் சென்று, பேரும் புகழும் பெற்று வருபவர்தான் ஷ குழுவை இயக்கிவரும் D.S. சுந்தரராஜ் அவர்கள். இந்த குழுவினரை

மலேயா பார்ட்டி எனவும் அழைக்கின்றனர். தமது குழுவினருடன் K. R ராமசாமி நாடக சபையாருடன் ஒரு முறையும், சினிமா பின்னணிப் பாடகர் S. C. கிருஷ்ணன் அவர்களுடன் ஒரு முறையும் மலேயா சென்றிருக்கிறார். மலேயா கோலாலம்பூர் ரேடியோவில் இவருடைய குழுவினரின் (Opening Music) இடம் பெற்றிருக்கிறது. சிலோன் ரேடியோவில் நாகூர் அனிபா பாடல்களுக்கு வாத்யக் குழுவை அமைத்திருக்கிறார்.

இவர் காலஞ்சென்ற கலைவாணர் N. S கிருஷ்ணன் அவர்களுடைய நாடகங்களுக்கும், S. S. ராஜேந்திரன், M. R. ராதா, K. R. ராமசாமி ஆகியோர் நடத்திவந்த நாடகக் கம்பெனிகளிலும் பங்கேற்றிருக்கிறார். பிறருக்குச் சொல்லிக்கொடுக்கும் அளவுக்குப் பாடக்கூடிய திறமை பெற்றவர். 8 வருட காலமாக பாடல்களுக்கு இசையும் அமைத்து வருகிறார். "மாயபில்லா" என்ற தெலுங்கு திரைப்படத்திற்கு உதவி மியூசிக் டைரக்டராக இருந்திருக்கிறார்.

இசையமையக்க நல்ல வாய்ப்பளித்தவர் M. R. ராதா அவர்கள். "ரத்தக்கண்ணீர்" நாடகத்தின் பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார். இவர் முதன் முதலில் வாசித்த கம்பெனி, வல்லம் A. A. சாமி அவர்களின் தஞ்சை ஜெயபால விநோத நாடக சபையாகும்.

ஹார்மோனியம் வாசிப்பதில் மிகவும் தேர்ச்சிபெற்றவர். இந்தக் கலையை துரைராஜ், மாணிக்கம், இருதயசாமி பாகவதர் ஆகியோரிடமிருந்து கற்றுக்கொண்டார்.

இவரிடமிருந்து இந்தக் கலையைக் கற்றுக்கொண்டவர்கள் அடைக்கலம், ஆறுமுகம், கனகராஜ் மற்றும் பலர் ஆவர்.

பொதுமக்களால் சிறந்த நடிகர், நடிகை என்று பாராட்டப்பட்டவர்களை மட்டும் "படமுதலாளியின் பார்வைக்கு" என்ற பகுதியில் வெளியிடுகிறோம்.

— ஆசிரியர்.

— ஜானகி ராமமூர்த்தி —

இவருடைய சொந்த ஊர் தஞ்சை மாவட்டத்திலுள்ள கும்பகோணம். 26 வயது நிரம்பியவர். 5-ம் படிவம் வரை படித்திருக்கிறார். சங்கீதக் கலையைத் தொழிலாகக்கொண்டவர். 11 வருட காலம் அனுபவம் பெற்றிருக்கிறார். அகில இந்திய ரேடியோவில் 8 வருடமாகப் பாடிக்கொண்டிருக்கிறார்.

சுமார் 7 வருடங்களுக்கு முன் நடந்த "மாயா" நாடகத்தில் முதன் முதலில் பின்னணி பாடினார். பொன்மலை புத்தொளி நாடகமன்றத்தார் நடத்திவந்த "ஊர்வசி" நாடகத்தின் மூலம் இவர் புகழ் இன்னும் பரவ ஆரம்பித்தது. எண்ணற்ற நாடகங்களில் பின்னணி பாடி மக்களின் பேராதரவைப் பெற்றார்.

தக்க பக்கவாத்யங்களுடன் கச்சேரியும் செய்து வருகிறார். இதில் 8 வருட அனுபவம் பெற்றிருக்கிறார்.

இவர் சென்னை நிர்மலா விஸ்வனாதன், சென்னை விஜயலட்சுமி. திருச்சி ஜெயா, சாந்தா, அகமதாபாத் மிருணாளினி சாராபாய் ஆகிய நடனப் பார்ட்டிகளுக்குப் பின்னணி பாடியிருக்கிறார்.

சென்னை, மன்னார்குடி, டால்மியாபுரம், ஒத்தப்பாலம், கோழிக்கோடு, பரோடா, பம்பாய் அகமதாபாத், லக்னோ ஆகிய நகரங்களுக்கும் சென்று நடனப் பார்ட்டிகளில் பின்னணி பாடிப் புகழ் அடைந்திருக்கிறார்.

இவருடைய சங்கீத ஆசிரியர் ஸ்ரீமான் ராமமூர்த்தி அய்யர் அவர்கள்.

வேகமாக முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் பின்னணி பாடகி ஜானகி ராமமூர்த்தி.

— K. L. பக்கிரிசாமி —



சுமார் 15 வருட காலமாக நடிகராகவும் பாடகராகவும் தொண்டாற்றி மக்களின் ஆதரவைப் பெற்று வருபவர்தான் K. L பக்கிரிசாமி. புத்தொளி நாடகமன்றத்தார் பல மேடைகளில் நடத்திக் கொண்டிருந்த "ஊர்வசி" நாடகத்தில் அருமையாகப் பின்னணி பாடி மக்களின் பேராதரவைப் பெற்ருர். இவர் புகழ் பெற்றதே இந்த நாடகம் தான். அதற்குப் பிறகு தான் இவரை நாடக உலகம் கவனிக்கத் தொடங்கியது. அவர் பாடும் பாட்டுகள் அனைத்தும் கர்னுடக சங்கீதத்தைப் பின்பற்றியிருக்கும். அவர் பாரதி, பாரதிதாசன், வள்ளுவர் ஆகியோரின் பாடல்களுக்கு இசை அமைத்துப் பாடக்கூடியவர்.

1948க்கு முன் நடிகராக இருந்த இவர் அதற்குப் பிறகு பாடகராக மாறினுர். பல நாடகங்களில் பின்னணி பாடி வருகிருர். குறிப்பாக "நடிகமணி" என்ற பட்டத்தை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களாலும் "இசைக் கலைஞர்" என்ற பட்டத்தை ஈ. வே. ரா. அவர்களாலும் பெற்றவர்.

சுமார் 34 வயது நிரம்பிய இவரின் சொந்த ஊர் நாகப்பட்டிணம். ஆனல் பொன்மலையிலேயே வசித்து வருகிருர். இவரை இந்த நிலைக்குக் கொண்டுவந்தவர் கோ. க. ராமதாசன் ஆவார்.

T. A. நடராஜன், L.E.E., T.T.C. (Dip)
மின்சாரப் பேராசிரியர்.
சேஷசாயி தொழில் நுட்ப கழகம், திருச்சி.

'நாடகம்' என்பது நாட்டை அகத்தில் கொண்டது என்று கூறுவர். உண்மையில் ஒரு நாட்டின் அடிப்படைத் தத்துவங்களை, கோட்பாடுகளை எடுத்துக் காட்டுவதற்கு நாடகம் ஒரு சிறந்த சாதனம் என்பதைக்கொண்டே மேற்படி விளக்கம் பிறந்தது. தற்காலத்தில் நாடகக் கலையானது மிகவும் முன்னணியில் உள்ளது என்று சொல்லுகிறோம். ஒரு நாடகத்தில் பலவகை கலைஞர்கள் ஈடுபடுவதால் தான் நாடகம் வெற்றி அடைகிறது.

நாடகக் கலையானது இன்று அடைந்துள்ள முன்னேற்றம் பாதி அளவு மின்சாரக் கலையின் ஈடுபாட்டால்தான் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை.

"ஸ்ரீ கிருஷ்ண லீலா" "சிவலீலா" "தசாவதாரம்" "ராஜராஜசோழன்" இவைபோன்ற எத்தனையோ பல அதிசயக் காக்ஷிகள் நிறைந்த நாடகங்களை நாம் கண்டு ரசித்துள்ளோம்.

தந்திரக் காக்ஷிகள் சினிமாவில் காட்டப்படுவதை விட நாடகங்களில் காட்டப்படுவது மிகவும் கடினமானது என்பதை எல்லோரும் உணர்வார்கள்.

ஒளி அமைக்கும் திறமையினாலும் ஒளி அமைப்புச் சாதனங்களை இயக்கும் சாமர்த்தியத்தாலும், ஒரு மின்சாரக் கலைஞன் ஒரு நாடகத்தை வெற்றியடையச் செய்துவிட முடியும்.

நாடகங்களில் சம்பந்தப்பட்ட மின்சாரக் கலைஞர்களில் மிகவும் தலைசிறந்த பலர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

பற்பல நாடகங்களில் நான் அவர்கள் சாதனைகளைக் கண்டு வியப்பு அடைந்துள்ளேன்.

நாடகத்தில் ஓர் அளவு ஈடுபாடு உடையவன் என்ற காரணத்தாலும், நான் ஒரு மின்சார பொறி இயல்பேராசிரியன் என்ற முறையிலும் மேற்படி மின்சாரக் கலைஞர்களின் சாதனைகள் என்னை மிகவும் கவர்ந்தன.

அவர்கள் மிகத் திறமையுடன் மேற்படி சாதனங்களை கையாள்கிறார்கள். அவர்கள் பலவிதத் தந்திரக் காக்ஷிகளை எப்படி நிறைவேற்றுகிறார்கள் என்பது எனக்கும் என்னுடைய சக பேராசிரியர்கள் சிலருக்கும் இன்னமும் புரியாதப் புதிராக உள்ளன.

ஆனால்..................

யாரையும் புண்படுத்தும் நோக்கத்தோடு நான் பின் வருபவற்றைச் சொல்லவில்லை என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சாரப் பொறிஇயல் பயின்றவர்கள் பலர் ஏன்? மின்சார இலாக்காபோன்ற மின்சாரத் தொழிலில் ஈடுபட்ட பலரும் ஆச்சரியப்படும் அளவுக்குத் திறமையும், நுண்ணறிவும் கொண்ட கலைஞர்களில் சிலர் அடிப்படையான சில மின்சாரத் தத்துவங்களைத் தெரிந்துகொள்ளாமல் பல சிறிய, ஆனால் அபாயகரமான தவறு இழைக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது மிகவும் வருந்துகிறேன்.

இதற்குக் காரணம் மேற்படி கலைஞர்களுக்கு மின்சாரத்தின் இயல்புகளைப்பற்றி விவரங்கள் அதிகம் தெரியாது என்பதுதான்.

என் மன நிலையை உணர்ந்த "நாடகம்" ஆசிரியர் கூறிய யோசனை எனக்குச் சரி என்றே தோன்றியது.

"நாடகம்" பத்திரிகையின் மூலம் மேற்படி அன்பர்களிடம் தொடர்பு கொண்டு மின்சாரச் சம்பந்தப்பட்டச்

சில தத்துவங்களையும், இயல்புகளையும் விளக்கலாம் என்பது தான் அந்த யோசனை.

ஆங்கிலம் அறியாதவர்கள் மின்சாரப் பொறிஇயல் சர்பந்தமான விஷயங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள தமிழில் புத்தகங்கள் இல்லை என்றே சொல்லலாம்.

ஆகவே, எனக்குத் தெரிந்த சில தத்துவங்களை இந்தப் பகுதியில் விளக்கலாம் என்று நினைத்துள்ளேன்.

இஃது நாடக சம்பந்தப்பட்ட மின்சாரக் கலைஞர்களுக்கு மட்டும் அல்ல, பொதுமக்களுக்கும் பயனளிக்கும் என்று எண்ணுகிறேன்.

தத்துவங்களை முடித்துக்கொண்டு நாடகங்களில் கையாளப்படும் சில தந்திரக் காக்ஷிகளைப்பற்றி கவனிப்போம்.

(தொடரும்)



சந்தேகம் ஒரு வியாதி, அதுவும் சினிமா உலக சம்பந்தப்பட்ட சந்தேகங்கள் மனதில் எழுந்தால் ரசிகர்களுக்குத் தூக்கம்கூட பிடிக்காது. ஆகையால் உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துவைக்க "நாடகம்" முன்வருகிறது. நீங்கள் தாராளமாக - ஆனால் புத்திசாலித்தனமாகக் கேட்கலாம். நீங்கள் கேட்டவை நாடகத்தில் வரும் பதில்களுடன் கேள்விகள் அனுப்பவேண்டிய முகவரி.

ஆசிரியர் "நாடகம்"
திருச்சிராப்பள்ளி-2.

நாடக விமர்சனம்

"கோடையிடி"

"உயிரோவியம்"

இடம் :
திருச்சி தேவர் மன்றம் ★

நாள் :
7-6-58 சனிக்கிழமை

நடிகர்கள் :

H. உசேன், K. T. R. சாமி, T. R. சௌந்திரராஜன்,
தஞ்சை P. S. செல்வா, P. C. ஜோதி.

இசைக்குழு :
T. P. சௌரிராஜன் பார்ட்டி.

ஒலி & ஒளி :
C. G. சாமி (ரைசிங்சன்)

மேக்கப் :
P. S. மீரா.

நிர்வாகம் :
P. S. நாதன்.

கதை-வசனம் & டைரக்ஷன் :

★ கலைச் செழியன் ★

தயாரிப்பு :

கவிமணிக் கலைமன்றம், திருவானைக்கா.

"உயிரோவியம்" உண்மைக் காதலின் உயர்வை எடுத்துக்காட்டும் ஒரு காதல் காவியம்.

இந்த நாடகத்தில் குறிப்பாக கெச். உசேன், கே. டி. ஆர். சாமி, டி. ஆர். சௌந்திரராஜன் ஆகியோர் சிறப்பாக நடித்தனர். தஞ்சை பி. எஸ். செல்வாவின் நடிப்பு இயற்கையாக இல்லை. பி. சி. ஜோதி நடனம் நன்ருக இருந்தது. இசைக் குழு பரவாயில்லை. மேக்கப் நன்ருக இருந்தது. ஒலி, ஒளி நன்ருக அமையவில்லை. வசனம் நன்ருய் இருந்தது. கதையைக் கொஞ்சம் குறைத்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். கூடுமானவரை எல்லோரும் நன்ருக செய்திருக்கிருர்கள்.

1. ரசிக ரஞ்சன சபா—திருச்சி.
தலைவர் : திவான் பகதூர், N. ராமசாமி அய்யர் B.A.B.L.
கௌரவ செயலாளர் : R. ராதாகிருஷ்ண அய்யர்

2. தென்னிந்திய கலைச் சங்கம்—திருச்சி.
தலைவர் : G. ரெங்கசாமி அய்யங்கார் M.A.M.L.
செயலாளர்கள் : T. K. V. ராமன் B.A.,
R. S. சாரியார்.

3. நாடகக் கலைஞர் சங்கம்—திருச்சி.
தலைவர் : C. S. கமலபதி.
செயலாளர் : ரா. நீலமேகம்.

4. உறந்தை கலா மன்றம்—உறையூர்.
தலைவர் : P. R. சுந்தரம்.
செயலாளர் : இரா. கோரா.

முகப்பு அட்டைப் படத்தை
அலங்கரித்துக் கொடுத்த
'ஜெகா ஆர்ட்ஸ்'
★ கெஜபதி அவர்களுக்கு ★
எங்கள் இதயபூர்வமான
நன்றி.

30—3—58 திருச்சி தபால்காரர் கட்டிட உதவி நிதிக்காக திருச்சி தேவர் மன்றத்தில், ஸ்ரீரங்கம் கலா நிலையத்தாரின் ' கவிஞனின் காதலி'' என்ற நாடகம் நடைபெற்றது.

17—4—58 கோட்டையூர் அழகாபுரியில் ஸ்ரீ அழகிய நாச்சி அம்பாள் திருவிழாவில் பேட்டையார் மண்டகப் படியில் நெடுங்குடி மாரிக்கண்ணு, நார்த்தாமலை எம். மருதப்பா குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும், காரைக்கால், இராம. வேதையா குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும், புதுக்கோட்டை குமாரி பத்மவல்லியின் பரத நாட்டியமும், ஒரியண்டல் நடனமும் நடைபெற்றது.

18—4—58 காரைக்குடி இடையர் தெரு, ஸ்ரீ ராஜராஜேஸ்வரி காளியம்மன் முதலாவது ஆண்டு புஷ்பவிழாவில் திருக்காளக்குடி ஸ்ரீமதி ருக்மணிதேசபந்து குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும், மதுரை சி ஆர். செளந்தரராஜனின் குழுவினருடன் குமாரி என். சுப்புலக்ஷ்மி இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.

4—5—58 புதுக்கோட்டை டவுன்ஹாலில் உயர்திரு. ஏ. தியாகராஜன் M.C. அவர்கள் தலைமையில், '' ஒளவை படிப்பக நிதிக்காக'' புதுவை ஒளவை நாடக மன்றத்தாரின் '' கைதியின் காதலி '' என்ற சமூக நாடகம் நடைபெற்றது.

10—5—58 ஸ்ரீரங்கம் வாசுதேவ மன்றத்தில் உயர்திரு. பாவலர் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் ''ரத்தக்கறை'' என்ற நாடகம் நடைபெற்றது.

26—5—58 திங்களன்று இரவு 9 மணிக்கு திருபுவனம் தொழிலாளர் கலை அரங்கத்தாரின் 'தேசபக்தி' என்னும் கூட்டுறவு தத்துவத்தை வளக்கும் சமூக நாடகம் திரு. டி கே. வின்பரெட். B.A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருச்சி கலைக்கழகப் பேரவைக்கூட்டம்.
1-2-58 மாலை 7 மணிக்கு

டாக்டர் R. சாம்பசிவம் M B. B. S அவர்கள்
தலைமையில் நடைபெற்றது.

1958ம் வருடத்திற்குண்டான தேர்தலில் நிர்வாக்குழுவின் விபரம்

தலைவர்:	K. பெருமாள் B A.,B.L.
உபதலைவர்கள்:	S. A. G. ராபி T. S. மாரியப்பா
செயலாளர்:	S. K. சுவாமிநாதன்
உதவிசெயலாளர்கள்:	பாரதி தங்கராசன் N. ஜெயராமன்
பொருளாளர்	M. லக்ஷ்மணன் B.A.,B.L.

ஆலோசகர்கள் குழு:

டாக்டர். R. சாம்பசிவம் M. B., B. S.
,, J. வெங்கட்ராமன் M. B., B. S.
,, R. கணேசன் M.B.,B.S.
வக்கீல் G. M. விருத்தாசலம் M.A.,B.L.
சிவாஜி ஆசிரியர் A. V. கிருஷ்ணசாமி ரெட்டியார்
புரொபசர் V. பாலகிருஷ்ணன்
R. S. மணி.

செயற்குழு அங்கத்தினர்கள்:

T. R. சுந்தரம்
M. S. எவாரிஸ்
P. M. பாலசுப்பிரமணியம்
G. K. கிருஷ்ணன்
R. நடராஜன்
M. V. ராம்ஜி
A. L. A. லாரன்ஸ்
இரா. கோரா,

விளம்பர விகிதங்கள்.

அட்டை கடைசி பக்கம்	3	கலர்	ரூ.	100/
,,	2	,,	ரூ.	80/
,,	1	,,	ரூ.	60/
2–3 அட்டை பக்கம்	1	,,	ரூ.	50/
முதல் பக்கம்	1	கலர்	ரூ.	40/
உள்பக்கம்	1	,,	ரூ.	30/
½ பக்கம்	1	,,	ரூ.	15/
¼ பக்கம்	1	,,	ரூ.	7,50

K. V. கணபதி,
விளம்பர மானேஜர் :
"நாடகம்" திருச்சி-2.

ஏஜன்ஸி பெயர்கள் :

(1) K. S. A. காதர், மாடர்ன் நியூஸ்மார்ட், எல்லென் ரோடு, மாதுங்கா மார்க்கெட், பம்பாய்-19.

(2) M. கிருஷ்ணன் பாபு, 44, திருச்சி மெயின் ரோடு, தாதகாபட்டி சேலம்-1.

(3) S. M. V. சாமி, கீழ அடைவழஞ்சான் தெரு, ஸ்ரீரங்கம்.

(4) T. P. ராமசந்திர ராவ், சிவாஜி இல்லம், 24, கீழவீதி, திருவிடமருதூர்.

(5) சொ. மணியரசன், அன்பு நிலையம், 911, பில்லுக்காரத் தெரு, தஞ்சாவூர்.

(6) Y. முகம்மது யாசின், சிதம்பரம் ரோடு, சீர்காழி.

ஆகஸ்டடு மாத இதழ் அதிகம் வேண்டுவோர் ஜுலை மாதம் 15 தேதிக்குள் தெரியப்படுத்தக் கோருகிறோம்.

— ஆசிரியர்.



நாடகக் கலாபிமானிகளுக்கும்
திரையுலக ரஸிகர்களுக்கும்
எங்கள் மனமார்ந்த
நன்றி!

★ திரைவானில் மின்னும் கலையுலக ஜோதிகளே! இசையுலக சிற்பிகளே!! நாடகத்தின் மூலம் நடிப்பின் திறமையைக்காட்டி நாடகம் என்ற சொல்லின் பண்பாட்டை விளக்கும் நல்லோரே!!!

★ உங்கள் தாம்பூலத்திற்கு ஏற்றது எங்கள் கம்பெனி தயாரிப்புகளானதும், மக்கள் பலரால் பல வருடங்களாகப் போற்றப்படுவதுமான, ''ஸ்பெஷல் கைச்சீவல், ஸ்பெஷல் வாசனை வருவல் சீவல், ரோஸ் பன்னீர்ப் புகையிலை'' என்பதை மறவாதீர்கள்.

மங்கள நன்னாளின்
தாம்பூலம், ரோஸ் பன்னீர்ப் புகையிலை
என்றென்றும் போற்றப்படுவது

★

உங்கள் திருப்தியே எங்கள் லக்ஷியம்

கொழும்பு சீவல் ஸ்டோர்

உரிமையாளர்:-N. தியாகராஜன்.

15, கீழப்போலிவார்ரோடு :: திருச்சிராப்பள்ளி-2.

சுந்தரா

லஞ்சு ஹோம்

போர்டிங் & லாட்ஜிங்
தெற்குவாசல், ஸ்ரீரங்கம்

Prop:
K. பரமேஸ்வர அய்யர்

—* * *—

குளிர்ந்த பானங்கள்!
ருசிகரமானசிற்றுண்டி!!
சுவைமிக்க சாப்பாடு!!!

ரூம்கள்
வாடகைக்குக்
கிடைக்கும்.
அவரவர்கள்
திருப்திக்கு ஏற்றபடி
அமைந்தது.

Consult: **SELVAM PHOTO STUDIO**
79, Big Bazaar (Near Wellington Talkies)
Tiruchirapalli—8.

*

for
FINE PORTRAITS
LIFELIKE
ENLARGEMENTS
INDOOR & OUTDOOR
GROUPS
AND
FLASH
PHOTOGRAPHS.

*

நல்ல காபி, அறுசுவை உணவு & சிற்றுண்டிகளுக்குச்
சிறந்த இடம்

செல்வம் காபி ஹவுஸ்

ராக்கின்ஸ் ரோடு, ★ திருச்சி ஜங்ஷன்.

ஆரோக்கியத்திற்கு
உகந்தது.
செல்வம்
காபி தூள்

சுகத்திற்கு
உகந்தது.
சூரியன் மார்க்
சீயக்காய்தூள்

:தயாரிப்பு:

K. சிவப்பிரகாசம் & கம்பெனி

250, பெரியகடைவீதி :: திருச்சிராப்பள்ளி-8.

வியாபாரிகளுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
புதிய மானேஜ்மெண்டில் 1—5—58 முதல்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல் ஸ்லேட்டுகள்

[விலை நயம்]

4	சைஸ் சாதா	ரூ. 10—0—0
4	சைஸ் கிளச்	ரூ. 12—0—0

நேவைக்கு எழுதவும்

பாபு இண்டஸ்டிரீஸ்

LESSEE ÷ A R. R. IYER

சிலேட் தயாரிப்பாளர்கள்:

TOWN STATION ROAD * TEPPAKULAM P O. TIRUCHY-2.

Managing Editor and Published by S. L. S. V. ANNAMALAI,
10, E. B. Road, Trichy-2 Editor: T. R. GOPAL.
Printed by JOTHI PRINTERS, 30, 31, Chinnakadai St., Tiruchi-2.

TEL; "POPULAR" POST BOX NO. 439

R. No. 89517.

பாபுலர் டைமண்ட்ஸ் கம்பெனி

Sole Prop: K. N. வெங்கட்ராம செட்டி

99. பெரியசெட்டித்தெரு, :: திருச்சிராப்பள்ளி-8.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்

R. No. 157741.

கைராசியுள்ள லக்ஷ்மிகரம் பொருந்திய **பாபுலர்** சிரஞ்சீவி கமலங்களும்சிகப்பு புளூ

மற்றும் எல்லாவித கலர் கமலங்களிலும் எல்லா ஷேப்களிலும், சைஸ்களிலும் நயமானவைகளாய்க் குறைந்த விலைகளில் கிடைக்கும்.

விலை ஜாபிதாவுக்கும், மற்ற விபரங்கட்கும் எழுதவும்.

(பெரிய செட்டித்தெருவில் முதல் கடை)

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

நடராஜ் ஸ்டோர்ஸ்

156/157 ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

(கிளை ஆபீஸ் 31, மேலச்சித்திர வீதி, மதுரை.)

Wrapper Printed at Valluvar Achakam, Tiruchy-8.